# DAC மதிப்பாய்வு நியதிகள்

## வினைத்திறன்

(Effeciency)

பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் பிரஜைகளுக்கான அதி செயற்திறன் மிக்க உறுப்பினராக இருப்பதற்கு ஆர்வம் கொண்டுள்ளீர்களா?

பாராளுமன்ற விவாதங்களின்போது உங்களது தொகுதியை பிரதிநிதித்துவம் செய்து சரியான கேள்விகளை எழுப்புவதன் ஊடாக நாட்டின் அபிவிருத்தியை உச்சமடையச் செய்வதற்கு ஆர்வங் கொண்டுள்ளீர்களா?

அப்படியாயின் பொருளாதார ஒத்துழைப்புக்கான அபிவிருத்தி நிறுவனம்/அபிவிருத்தி உதவிக்கான குழு (OECD/DAC) ஏற்றுக்கொண்ட மதிப்பாய்வு நியதிகள் அடங்கிய இந்த கையேட்டுத் தொடரினை வாசிப்பது பிரயோசனமாகும்.

**மதிப்பாய்வுக்கான ஆசிய பசுபிக் பாராளுமன்ற உறுப்பினர்களின் அமையம்**

## அறிமுகம்

பாராளுமன்றத்திற்குள்ள அதிகாரங்களின் ஊடாக மக்களை பிரதிநிதித்துவம் செய்தல், சட்டவாக்கம், அரசாங்கத்தின் பொறுப்புக் கூறல் போன்ற அபிவிருத்தி செயன்முறையில் முக்கிய பாத்திரம் ஒன்றை வகிக்க முடியும். ஆனாலும் அரசாங்கத்தின் கொள்கைகளும் நிகழ்ச்சித் திட்டங்களும் வலுவாகவும் சரியாகவும் நடைமுறைப்படுத்தப்பட்டதா? என்பதையும், மக்களின் வாழ்க்கையில் அவை விருத்தியை ஏற்படுத்தியதா என்பதையும் எவ்வாறு உறுதி செய்ய முடியும்? அவை சிறந்த கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களா? என்பதை எவ்வாறு உறுதி செய்ய முடியும்?

மதிப்பாய்வின் மூலமான ஆதாரங்களைக் கொண்டு விமர்சன பூர்வமான சிந்தனைகள் ஊடாக திட்டங்கள் மற்றும் கொள்கைகளை வடிவமைப்பதில், செயற்படுத்துவதில், கலாசாரம் ஒன்றை வளர்த்தெடுப்பதில் பாராளுமன்ற உறுப்பினர்களின் வகிபாகமானது சிறந்த தலைமைத்துவத்துடன் நியாயமான, நிலைபேறான அபிவிருத்திக்கு இட்டுச் செல்வதாகவும் அமையும்.

அபிவிருத்தி இடையீடுகள் (Intervention) தொடர்பிலான தெளிவான புரிதலுடன் பாராளுமன்ற விவாதாங்களிலும் துறைசார் குழு அறைக் கலந்துரையாடல்களிலும் சரியான கேள்விகளை முன்வைப்பதன் மூலம் பிரஜைகளுக்கான உச்சப்பயன் கிடைப்பதை உறுதி செய்யலாம். பாராளுமன்ற உறுப்பினர்கள் விவாதங்களின்போது சரியான கேள்விகளை மதிப்பாய்வு ஆதாரங்கள் ஊடாக முன்வைப்பதற்கு அவசியமான அடிப்படைகளை OECD/ DAC மதிப்பாய்வு நியதிகள் வழங்குகின்றன.

## வினைத்திறன் (Effeciency)

வளங்கள் எந்த அளவில் சரியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை அளவீடு செய்வதாகவே OECD /DAC **வினைத்திறன்** (Efficiency) **நியதியை** வரைவிலக்கணம் செய்கிறது. இடையீட்டின் ஊடாக எதிர்பார்க்கப்படும் வெளியீடுகள் பெறுபேறுகளைத் தருவதில் எந்தளவு தூரம் காலத்தையும் சிக்கனத்தையும் கவனத்தில் கொள்கிறது என்பதை அளவிடப் பொருத்தமான நியதியாக OECD /DAC வினைத்திறனை (Efficiency) வரைவிலக்கணம் செய்கிறது.

## முக்கிய விதிமுறைகள்

**சிக்கனம் :** உள்ளீடுகளை (நிதி, நிபுணத்துவம், இயற்கை வளங்கள், நேரம்) வெளியீடுகளாக, விளைவுகளாக, நேர்முறை தாக்கத்தை ஏற்படுத்துவதாக மாற்றுத் தெரிவுகளுடன் கூடியதாக எவ்வாறு செலவுக் கட்டுப்பாட்டுடன் கையாளப்பட்டுள்ளது என்பதை அளவிடல்.

**காலம் :** இடையீடடின் பெறுபேறுகளை நிர்ணயிக்கப்பட்ட அல்லது சூழ்நிலைக் காரணிகளுக்கு ஏற்ப மாற்றி அமைக்கப்பட்ட கால எல்லைக்குள் அடைவதன் செயல்பாட்டுத் திறனை அளவிடும் முறை.

## மதிப்பாய்வு நியதிகள்

**பொருத்தப்பாடு (Relevance)**
இடையீடு சரியானனைதைச் செய்கிறதா?

**செயற்திறன் (Effectiveness)**
இடையீடு அதன் நோக்கங்களை அடைகின்றதா?

**தாக்கம் (Impact)**
இடையீடு எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தியது?

**இணைக்கப்பாடு (Coherence)**
இடையீடு எந்தளவுதூரம் இணக்கமாகவுள்ளது?

**வினைத்திறன் (Efficiency)**
வளங்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன?

**நிலைபேறானதன்மை (Sustainability)**
இறுதிவரையான பயனாற்றுகை அடையப்பெறுகின்றதா?

## மதிப்பாய்வின் வினைத்திறன் (Efficiency) நியதியை பாராளுமன்ற உறுப்பினர்கள் எவ்வாறு பயன்படுத்தலாம்?

நிறைவேற்றுத் துறையின் செயற்பாடுகளை உறுதி செய்யும் வகையில் பொது நிதிப் பயன்பாட்டை மேற்பார்வை செய்யும் பொறுப்பினை பாராளுமன்றத்துக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரசியலமைப்பு வழங்குகின்றது. அரசாங்கத்தின் அமைச்சுக்களினாலும் திணைக்களங்களினாலும் முன்னெடுக்கப்படக்கூடிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், இடையீடுகளுக்கு அவசியமான பொது நிதி ஒதுக்கீடுகளை பாராளுமன்றமே அங்கீகரித்து அனுமதிக்கின்றது. அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கொள்கைகள் முறையாகத் திட்டமிடப்பட்டனவா?, முறையாக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டனவா? நடைமுறைப்படுத்தப்பட்டனவா? எதிர்பார்க்கப்பட்டவகையில் செயற்படுத்தப்பட்டனவா? முதலான கேள்விகளை எழுப்பும் வகிபாகமும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குரியதாகும்.

மேலும் இதற்கு மாற்றான ஏற்பாடுகள் / மூலோபாயங்களின் ஊடாக, இதே அளவான அல்லது இதைவிட குறைவான வளங்களைக் கொண்டு குறித்த திட்டத்தை நடைமுறைபடுத்தி சிறந்த பெறுபேற்றை அடையும் சாத்தியம் குறித்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கேள்விகளை எழுப்பலாம்.

கடந்த காலத்தில் பொது நிதி எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை பரீட்சித்துப் பார்ப்பதற்கும் எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத்திட்டத்துக்கு அனுமதி அளிப்பது தொடர்பிலும் பலமான விவாதங்களை உருவாக்க **மதிப்பாய்வின் வினைத்திறன்** (Efficiency) நியதியானது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உதவுவதாக உள்ளது.

**மதிப்பாய்வின் வினைத்திறன்** (Efficiency) நியதியினை முறையாக விளங்கிக்கொள்வதன் ஊடாக குறிப்பாக தமது தொகுதிக்கும் பொதுவாக நாட்டு பிரஜைகளுக்கும் அவசியமான விதத்தில் பொது நிதி பயன்படுத்தப்படுவதனை வழிப்படுத்துவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சிறந்த அடித்தளத்தைப் பெற்றுக்கொடுக்க முனைகிறது.

## வினைத்திறனை (Efficiency) உறுதி செய்யும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பக்கூடிய கேள்விகள்

அபிவிருத்தி நோக்கிய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் இடையீடுகளின் வினைத்திறன் (Efficiency) குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பக்கூடிய கேள்விகளாக பின்வருவனவற்றை உதாரணமாகக் கொள்ளலாம். ஆனாலும் இத்தகைய கேள்விகளை எழுப்பும்போது, அத்தகைய கொள்கை, இடையீட்டின் தன்மையையும் அது முன்னெடுக்கப்படும் நாட்டின் பின்னணியையும் கருத்திற்கொண்டு விவாதத்துக்கு அவசியமான விதத்தில் கேள்விகளை எழுப்புவது முக்கியமாகும்.

**அ)** பொது நிதியின் ஊடான வளங்கள் எந்தளவுக்கு செயற்திறனாக் அதன் விளைவுகளை அடையும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது? இடப்பட்ட பணத்திற்கு இணையான பெறுமதி அங்கே உள்ளதா?

**ஆ)** மாற்று வழிமுறைகள் என்ன? அவற்றுக்கான செலவுகளும் அவற்றின் விளைவுகளும் என்ன?

**இ)** பெறுபேறுகள் உரிய திட்டதின்படியும் உரிய நேரத்திலும் நிறைவு பெற்றுள்ளனவா? மாற்றங்கள் திருத்தங்கள் செய்யப்பட்டு இருந்தால் அவை என்ன? ஏன்? செய்யப்பட்டன?

**ஈ)** இடையீட்டின் வினைத்திறனை (Efficiency) அடைந்துகொள்வதற்கு உதவியாக இருந்த காரணிகள் அல்லது தடங்கலாக இருந்த காரணிகள் எவை?

---

*Source: De Silva,S.(2021).Theory of Change For Development Success: Workbook. Colombo, Sri Lanka: Sri Lanka Evaluation Association*

## வினைத்திறன் (Efficiency) தொடர்பிலான வேறு வள மூலங்கள்

OECD evaluation criteria, retrieved from
*https://tinyurl.com/2p9835a6*

OECD(2022). Understanding the six criteria: Definitions, elements for analysis and key challenges. retrieved from
*https://tinyurl.com/bddeffx8*


**வெளியீடு**

ASIA PACIFIC PARLIAMENTARIANS FORUM FOR EVALUATION

APEA Asia-Pacific Evaluation Association

Global Parliamentarians Forum for Evaluation

தொடர்புகளுக்கு: apea.coordinator@gmail.com

**தமிழாக்கத்திற்கான அனுசரணை**

SLEvA

Sri Lanka Evaluation Association

தொடர்புகளுக்கு: sleva.sec@gmail.com